# நோயாளிக்குத

## தகவல்

## சிகிச்சை மருந்து:

# உயர் இரத்த அழுத்தம்

*அல்ஃபா 1 - ஏட்ரெனர்ஜிக் பிளாக்கர்*

*☐ பிரஸோசின்*



Medicine To Treat: Hypertension - Alpha-Adrenergic Blocker

## அல்ஃபா 1- ஏட்ரெனர்ஜிக் பிளாக்கர் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?

இந்த மருந்துகள் இரத்த நாளத்தைக் குறுகச் செய்யும் காரணிகளைத் தடுக்கக் கூடியவை. அதன் விளைவாக, இரத்த நாளங்கள் விரிவடைகின்றன. அதனால் இரத்த அழுத்தம் குறைகிறது.

## அல்ஃபா 1- ஏட்ரெனர்ஜிக் பிளாக்கர் ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான பக்கவிளைவுகள் யாவை?

உடலின் இருப்பு நிலையில் மாற்றம் ஏற்பட்டால் இந்த மருந்து இரத்த அழுத்தத்தை கணிசமான அளவு குறைக்கும் . குறிப்பாக, படுத்த நிலையிலிருந்து எழுந்து நிற்கும்போது தலைசுற்றல் அல்லது மயக்கத்தை ஏற்படுத்தும். எனினும், அறிகுறிகள் பொதுவாக மிதமாகவும் தற்காலிகமானதாகவுமே இருக்கும். தலைவலி, வழக்கத்திற்கு மாறான இதயத் துடிப்பு ஆகியவை மற்ற பக்கவிளைவுகள். இந்த மருந்துகள் கட்டுக்கடங்காத சிறுநீர்ப் பிரச்சினையை அதிகரிக்கலாம்.

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் எடுக்க வேண்டும்?

தலைசுற்றல் பக்க விளைவைக் குறைக்க உடல் இருப்பு நிலை மாற்றங்களை, குறிப்பாக, முதல் வேளை மருந்தை நீங்கள் உட்கொண்ட பிறகு தவிர்க்க வேண்டும்.

## நான் ஒருமுறை மருந்தை பயன்படுத்த மறந்து விட்டால் என்ன செய்வது?

- அவ்வாறு மருந்தை உட்கொள்ள மறந்தால் உங்களுக்கு நினைவு வந்தவுடன் உட்கொண்டு விடுங்கள். ஒருசமயம் அடுத்த வேளைக்கான மருந்தை உட்கொள்ள வேண்டிய காலகட்டம் வந்துவிட்டால் வழக்கமான அளவை உட்கொள்ளுங்கள். மருந்தின் அளவை இரட்டிப்பாக்காதீர்கள்.

## என்னுடைய மருந்துகளை எப்படி பாதுகாக்க வேண்டும்?

- வேறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலன்றி மருந்தை வெப்பம் குறைவான, ஈரமற்ற இடத்திலும் நேரடி சூரிய ஒளிபடாத இடத்தில் வைக்கவும்.
- அதற்குரிய ஒட்டுவில்லையுடைய உரைகலத்தில் வைத்திருங்கள். வெவ்வேறு விதமான மருந்துகளை ஒரே உரை, கலத்தில் சேர்த்து வைக்கக்கூடாது.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

SingHealth Ministry Of Health National Healthcare Group

Printed in 2002